மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளுக்கும் ஏற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. அதுபற்றியும் விவாதிக்கப்பட்டது.

மாநில திட்டக் குழு

*396 **வின—திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு திட்டக் கமிஷன் எப்போது செயல்படத் துவங்கும்?

(இ) 1971-72-ம் ஆண்டுக்கான திட்டம் எப்போது தீட்டப் படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) தமிழ்நாடு திட்டக் கமிஷன் 17-6-1971-ம் தேதி முதல் தனது பணியைத் துவக்கியது.

(இ) 1971-72-ம் ஆண்டுக்கான திட்டம் ஏற்கனவே மாநில நிதித் துறையால் திட்டப்பட்டு, மன்றத்தில் 1971-72-ம் ஆண்டுக் கான திருத்திய வரவு செலவு பட்டியலுடன் வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு திட்டக் கமிஷன் தனது திட்ட அறிக்கை எதுவும் இதுவரை தரவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: கிட்டத்தட்ட 6 மாத காலம் ஆகிவிட்டது. திட்டக் கமிஷன் தனது பணியைத் துவங்கி. 1971-72-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைக் குறித்துக் கருத்துக்கள் ஏதாவது சொல்லக்கூடிய முறையிலோ அல்லது வருஷா வருஷம் எம்மாதிரித் திட்டம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியோ ஒரு இடைக்கால அறிக்கையினைத் திட்டக் கமிஷன் சமர்ப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது அதிலே 'டாஸ்க் ஃபோர்ஸ்' என்று 15 பிரிவுகள் அமைக்கப்பட்டு, அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றியும் இன்றைக்கு ஆய்ந்து வருகி றார்கள். நான் ஏற்கெனவே அறிவித்ததைப் போல் வருகின்ற வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தின் போது ஒரு முன்வரைவு ஒன்றை வைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். எனவே. வரவு-செலவுத் திட்டம் விவாதிப் பதற்குள்ளாக அதைத் தருவார்கள் என்று நாம் எதிர் பார்க்கலாம்.

Dr. H. V. HANDE : Sir, may I know whether the State Planning Commission is working in conjunction with the Central Planning Commission and whether there is any co-ordination between the State Planning Commission and the Central Planning Commission? Also, whether the State Planning Commission has discovered certain new ideas or plans which have escaped the attention of the Central Planning Commission and if so, whether any particular headway or special contribution has been made by State Planning Commission?

1971 டிசம்பர் 15]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்தியிலே இருக்கும் திட்டக் கமிஷனுக்கும் இதற்கும் கோ-ஆர்டினேஷன் இருப்பதாகச் சொல்ல முடியாது. இங்கே இப்பொழுது புதிய திட்டங்கள் ஏதையாவது அறிவித்திருக்கிறார்களா என்றால், அவர்கள் அளிக்கின்ற அறிக்கையின் வரைவைப் பொறுத்துத்தான் அதை அறிவிக்க முடியும். இப்பொழுது இடைக்காலத்தில் அவைகளை அறிவிப்பது சாத்தியமாக இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலும் திட்டக் கமிஷன் அமைப்பதுபற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்ததே, அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாவட்ட அளவில் திட்டக் கமிஷன் வைக்கப்படவில்லை. மாநிலத் திட்டக் கமிஷன் மாவட்ட அளவில் தொடர்புகள் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, மாநில திட்டக் கமிஷன் ஆங்காங்குள்ள பொதுமக்களையும், பொது ஜனப் பிரதிநிதிகளையும், சர்வ கட்சிப் பிரதிநிதிகளையும் கலந்து மாநில அளவில் திட்டம் வகுத்து அரசுக்குப் பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதில் சர்வகட்சிப் பிரச்சினை எதுவும் இல்லை. கட்சிச்சார்பற்ற முறையில் திட்டத் துறையில் ஆழமான கருத்துக்களையுடைய வல்லுநர்களையும் கலந்து ஆலோசிப்பதற்குத் திட்டக் குழுவில் உள்ளவர்கள் எப்போதும் தயாராக இருப்பார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : இந்தத் திட்டக் கமிஷன் குறுகிய காலத் திட்டங்களைத் தீட்டாமல் நீண்டகாலத் திட்டங்களைத் தீட்ட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீண்டகாலத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்பதற்காகத்தான் திட்டக் கமிஷனே அமைக்கப் பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know whether the State Planning Commission is purely an official Commission or members of the House will be given representation in that?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதிலே இப்போது இருக்கிறவர்களில் யாரும் அவை உறுப்பினர்கள் இல்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி அதன் தலைவராக அவை முதல்வர் நான் இருக்கிறேன். துணைத் தலைவராக அடிஷனல் சார்ஜில் திரு. இராஜாராம் இருக்கிறார். முழுநேர உறுப்பினர் டாக்டர் ப்ரைட்சிங். பகுதிநேர உறுப்பினராக டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, டாக்டர் பி. நடராசன், டாக்டர் எம். சண்முக சுந்தரம், திரு. என். மகாலிங்கம் ஆகியோர் இருக்கிறார்கள், அவை உறுப்பினர் வேறு யாரும் இல்லை.

திரு. கா. காளிமுத்து: மாநில அளவில் அமைக்கப்பட்டிருக்கிற திட்டக் குழுவைப்பற்றி மைய அரசு அபிப்பிராயம் ஏதாவது தெரிவித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில அரசுத் திட்டக் குழு அமைத்திருப்பதை மைய அரசு வரவேற்று இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: மாநிலத் திட்டக் குழுபோன்று மாவட்ட ரீதியில் திட்டக் குழுவை அமைத்து, அவர்களது ஆலோசனைகளையும் கேட்டு மாநிலத் திட்டக் குழு அரசுக்கு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திட்டங்கள் உச்சியில் இருந்து போடப்படாமல் அடியில் இருந்து போடப்பட வேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் மாவட்ட அளவிலும் இன்னும் வட்ட அளவிலும், கிராம அளவிலும் தேவையான திட்டங்களைத் தேவையானவர்களுடன் மாநிலத் திட்டக் குழுவினர் ஆராய வேண்டுமென்ற அடிப்படையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்டங்களுக்கென்று தனித்தனி குழுக்கள் போடப்படாவிட்டாலும் திட்டக் குழுவில் உள்ளவர்கள் மாவட்ட அளவில் பரிசிலனை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். தேவராசன் : மாநில அளவில் திட்டக்குழு அமைக்கப்பட்டிருப்பதை மைய அரசு வரவேற்று இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, இதற்கு மத்திய அரசிடம் இருந்து நிறையப் பொருள் எதிர்பார்க்கலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதிர்பார்க்கலாம்.

மதுவிலக்குப் பிரச்சாரம்

*397 வினா—திரு. எம். முத்தையா
திரு. கே. எ. வகாப்

மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் மது அருந்துவதின் தீமைகளை எடுத்துக் காட்ட ஒரு பிரச்சாரக் குழு அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(உ) அக் குழுவில் பணியாற்றுபவர்களுக்கு ஊதியம் ஏதேனும் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) தமிழ்நாடு அரசு அமைக்கவில்லை.

(இ) & (உ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.